**கவனிக்க.-** 2006.04.07 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (ஆ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1441 - 2006 අප්‍රේල් 12 වැනි බදාදා - 2006.04.12

1441 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) – பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 210 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 211 |
| விலைக்கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 211 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, ஏப்பிறல் 21 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, ஏப்பிறல் 07 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

2006 இன் இல. 81

டீஆர்எவ்/824/என்வை/04.

## இலங்கைத் கடற்படை - நிரந்தரக் கடற்படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு

2006, சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து தற்காலிக றியர் அத்மிரால் ஆக:

கொமதோரு பமினிஹந்நதிகே ஆனன்த ஜயலால் குருகுல பீரிஸ், ஆர்எஸ்பீ, யூஎஸ்பீ, பீஎஸ்சீ, இகப.

கொமதோர் சுனில் ரஞ்சன் சமரதுங்க ஆர்எஸ்பீ, யூஎஸ்பீ, பீஎஸ்என், இகப.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, சனவரி 19.

4-213

2006 இன் இல. 82

இல. : டீஆர்எவ்/524/என்வை/01/5

## இலங்கைத் கடற்படை - நிரந்தரக் கடற்படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு

2005, திசெம்பர் மாதம் 11 ஆந் திகதியிலிருந்து த்றகாலிக லெப்டினன்ட் கமாண்டர் (பொ) ஆக:

லெப்டினன்ட் (பொ) திலக் காமினி சிசிர குமார உடுகமகே, இகப.

2. மேற்குறிப்பிட்ட பதவியுயர்வு பரிசோதனை அடிப்படையில் ஆவதுடன் உயர்த்தப்பட்ட பதவியினை ஏற்பதற்கு தகுதியற்றவரெனத் தெரிந்து போனால் உத்தியோகத்தரின் பதவியுயர்வினை இரத்துச் செய்து மீண்டும் முன்னரிருந்த பதவிக்கு நியமனம் செய்யப்படுவார்.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, சனவரி 23.

4 - 212

---

இல. : டீ/டீஜஎஸ்சீ/என்வை/06/76

## இலங்கைத் கடற்படை - நிரந்தரக் கடற்படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணையிலிருந்து அகற்றுதல்

2006, பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதியிலிருந்து செயற்படும் விதம் இலங்கை கடற்படை நிரந்தரக் கடற்படையணியின் பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் அதிகாரவாணையிலிருந்துஅகற்றுதல் மாண்புமிகு சனாதிபதிஅவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

லெப்டினன்ட் (வ) மாலேவனகம் லக்ஷ்கே ஹேமஜித் ருக்ஷான் இகப.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, சனவரி 26.

4 - 211

# அரசாங்க அறிவித்தல்கள்

## ஹோமியோபதி வைத்திய சபைக்கு தலைவரொருவரை நியமனம் செய்தல்

ஹோமியோபதி வைத்திய சபைக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 2006 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட வாக்கெடுப்பின்போது தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் ஏழு பேரில் அதன் தலைவராக ஹோமியோபதி வைத்தியர் திரு. எஸ். டி. பி. பெரேரா 2006.03.13 ஆந் திகதி தொடக்கம் 05 வருடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டிருப்பதை அறியத் தருகின்றேன்.

அசோக்கமாலிமகே,
செயலாளர்,
சுதேச வைத்திய அமைச்சு.

சுதேச வைத்திய அமைச்சு,
330, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2,
2006, மாச்சு 13.

4-232

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## வரையறுக்கப்பட்ட செலான் வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட செலான் வங்கிப் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

பியச அலகு - கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட செலான் வங்கிப் பணிப்பாளர் சபையினால் 28.11.2005 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"சீதுவையைச் சேர்ந்த தீபனி சம்பா குமாரி ஹெட்டியாரச்சி மற்றும் வர்ணகுலசூரிய ஆனந்த ஸ்ரீலால் பர்னாந்து ஆகியோர் கடனெடுத்தவர்கள் என்ற வகையில் வரையறுக்கப்பட்ட செலான் வங்கியின் சார்பில் பிரசித்த நொத்தாரிசு எப் பீ. ஜேசுதாசன் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1999, திசெம்பர் 15 ஆந் திகதி 479 ஆம் இலக்க முறிமீது வருமதியான கொடுப்பனவுத் தவணை தவறியுள்ளார்கள். ஆதலால், இப்பொழுது 2005, ஏப்பிறல் 30 ஆந் தேதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறியின்மீது மூன்று இலட்சத்து எழுபத்து மூவாயிரத்து ஐந்நூற்றொரு ரூபா ஐம்பத்தெட்டுச் சதம் (ரூபா 3,73,501.58) வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட ரூபா 3,73,501.58 பணத்தொகையும் 2005, மே 01 ஆந் தேதிய முதல் விற்பனைத் தேதி வரை ஆண்டொன்றுக்கு முப்பத்திரண்டு சதவீதப்படி (32%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 479 ஆம் இலக்க முறியினால் வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான அட்டவணை யில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனமும் வளவும் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. ரஞ்சித் எஸ். மஹாநாம என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென வரையறுக்கப்பட்ட செலான் வங்கிப் பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், நீர்கொழும்பு பதிவுப் பிரிவினுள் அளுத்குறு கோறளேயின் ராகம் பத்துவில் கட்டான பிரதேச சபையின் ரத்தொலுவ உப அலுவலக எல்லைகளினுள் ரத்தொலுவ கிராமத்தில் அமைந்துள்ள தெல்கஹவத்த', 'கெந்தலந்த' மற்றும் 'திவிகலேவத்த' என்றழைக்கப்படுவதும் 'சென்றல் கிறீன் ரெறேஸ்' என்று இப்போது அறியப்படுவதுமான காணி தொடர்பில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யு. எஸ். எஸ். மென்டிஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1998.12.23 ஆந் திகதிய 1463/2 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 16 எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்படுவதுமான காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள நிலம், மரங்கள், தோப்புகள், கட்டடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட துண்டு இல. 16 இன் எல்லைகள் : வடக்கு : சொல்லப்பட்ட வரைபடம் இல. 1463/2 இல் துண்டுகள் 15 மற்றும் 14 ; கிழக்கு : சொல்லப்பட்ட வரைபடம் இல. 1463/1 இல் துண்டு 17 ; தெற்கு : சொல்லப்பட்ட வரைபடம் இல. 1463/2 இல் துண்டுகள் 19 ; மேற்கு : சொல்லப்பட்ட வரைபடம் இல. 1463/2 இல் துண்டு 19. சொல்லப்பட்ட வரைபடம் இல. 1463/2 ஆம் இலக்க வரைபடத்தின்படி ஒன்பது பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 9பே.) விஸ்தீரணமுள்ள இது நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் தொகுதி/ பக்கம் பி 142 /260 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

கீழேயுள்ளவாறு அதில் மேலும் விவரிக்கப்பட்ட காணித்துண்டு களின் மேலாக வழியுரிமை கொண்டதாக

### இரண்டாம் அட்டவணை

1. மேலே சொல்லப்பட்ட ரத்தொலுவ கிராமத்தில் அமைந்துள்ள 'தெல்கஹவத்த', 'கெந்தலந்த' மற்றும் 'திவிகலேவத்த' என்றழைக் கப்படும் காணி தொடர்பில் உத்தரவுபெற்ற நில அளவையாளர்

டபிள்யு. எஸ். எஸ். மென்டிஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1992.12.27 ஆந் திகதிய 447 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 3 (வீதி ஒதுக்கல்) எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்ட காணிப்பங்கீடு முழுவதும்.

2. மேலே சொல்லப்பட்ட ரத்தொலுவ கிராமத்தில் அமைந்துள்ள 'தெல்கஹவத்த', 'கெந்தலந்த' மற்றும் 'திவிகலேவத்த' என்றழைக்கப்படு வதும் 'சென்றல் கிறீன் ரெறேஸ்' என்று இப்போது அறியப்படுவதுமான காணி தொடர்பில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யு. எஸ். எஸ். மென்டிஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1998.11.14 ஆந் திகதிய 1463/1 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 மற்றும் துண்டு 2 (வீதி ஒதுக்கல்கள்) எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்ட காணிப்பங்கீடு முழுவதும்.

3. மேலே சொல்லப்பட்ட ரத்தொலுவ கிராமத்தில் அமைந்துள்ள 'தெல்கஹவத்த', 'கெந்தலந்த' மற்றும் 'திவிகலேவத்த' என்றழைக்கப்படுவதும் 'சென்றல் கிறீன் ரெறேஸ்' என்று இப்போது அறியப்படுவதுமான காணி தொடர்பில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யு. எஸ். எஸ். மென்டிஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1998.12.23 ஆந் திகதிய 1463/2 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 13 மற்றும் துண்டு 15 (வீதி ஒதுக்கல்கள்) எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்ட காணிப்பங்கீடு முழுவதும்.

**மூன்றாம் அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், நீர்கொழும்பு பதிவுப் பிரிவினுள் அளுத்குறு கோறளேயின் ராகம் பத்துவில் கட்டான பிரதேச சபையின் ரத்தொலுவ உப அலுவலக எல்லைகளினுள் ரத்தொலுவ கிராமத்தில் அமைந்துள்ள 'தெல்கஹவத்த', 'கெந்தலந்த' மற்றும் 'திவிகலேவத்த' என்றழைக்கப்படுவதும் 'சென்றல் கிறீன் ரெறேஸ்' என்று இப்போது அறியப்படுவதுமான காணி தொடர்பில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யு. எஸ். எஸ். மென்டிஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1998.11.14 ஆந் திகதிய 1463/1 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 4 எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்ட காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள நிலம், மரங்கள், தோப்புகள், கட்டடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட துண்டு 4 இன் எல்லைகள் : வடக்கு : சொல்லப்பட்ட வரைபடம் இல. 1463/1 இல் துண்டுகள் 2, 3 மற்றும் 1 ; கிழக்கு : உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யு. எஸ். எஸ். மென்டிஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1998.11.14 ஆந் திகதிய 1463/1 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டுகள் 3 மற்றும் 5 ; தெற்கு : எல். போல் ரஞ்சித் சில்வாவின் காணி ; மேற்கு : வரைபடம் இல. 447 இல் துண்டு 01, வரைபடம் இல. 1463/1 இல் துண்டுகள் 03 மற்றும் 02. சொல்லப்பட்ட வரைபடம் இல. 1463/1 ஆம் இலக்க வரைபடத்தின்படி மூன்று றூட் இருபத்து இரண்டு தசம் ஒரு பேர்ச்சஸ் (0ஏ. 3றூ. 22.1பே.) விஸ்தீரணமுள்ள இது நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் பி 142 / 219 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சீ. கொட்டிகல,
பிரதிப் பொது முகாமையாளர் - சட்டம்.

4-198